**நவம்பர் - 25**

**"சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல." - யாக் 1.13.**

பிதாவினால் தகுதியானவைகள் என்று எண்ணப்படுகிற சோதனைகளுக்கும், எதிராளியாகிய சாத்தானிடத்திலிருந்து வருகிற சோதனைகளுக்கும் ஒரு வித்தியாசமுண்டு. முந்தினவைகள், தேவனுக்கும், நீதியின் தத்துவங்களுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்களா என்பதற்குரிய சோதனைகள். இவைகளைத் தாங்கிக்கொள்கிற எல்லோருக்கும் இவ்விதமாக நீதிக்குத் தாங்கள் உண்மையுள்ளவர்களாயிருக்கிறோம் என்பதை மெய்ப்பித்து காட்டுகிறவர்களுக்கும் இவைகள் ஒரு ஆசிர்வாதமாகவும், ஒரு உதவியாகவும் இருப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. சாத்தானுடைய சோதனைகள் இதற்கு மாறாக, தீமையிலும், அநீதியான செயல்களிலுமுள்ள ஆபத்துக்கள், கண்ணிகள், இருளுக்குப் பதில் வெளிச்சத்தையும், வெளிச்சத்துக்குப் பதில் இருளையும் வைத்து, சரியானதைத் தப்பாகவும், தப்பானதை சரியாகவும் தோன்றச் செய்வது ஆகிய இவைகளிலுள்ள திரித்துக் கூறுதல், தீமையில் சிக்க வைத்தல், இந்த அர்த்தத்தில் தேவன் யாரையும் சோதிக்கிறதில்லை.

**- Z ’04, 7 (R 3296).**

கவனத்தைக் கவரக்கூடிய எண்ணங்களே சோதனைகள். அவைகள் நல்லவையாகவோ, அல்லது தீமையானதாகவோ இருக்கலாம். பிந்தினவைகள் பிசாசு, உலகம், மாம்சம் ஆகிய இவைகளிலிருந்து வருபவைகள். முந்தினவைகள் கர்த்தாரிடத்திலிருந்து அவருடைய ஆவி, வார்த்தை, பராமரிப்பு இவைகளின் மூலமாக வருகின்றன. தீமை செய்யத்தூண்டுகிற சோதனைகள் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டாலும் நம்முடைய சோதனைக்காக அவைகள் ஒருபோதும் கர்த்தரிடத்திலிருந்து வருகிறதில்லை. ஏனென்றால், பூரண ஞானம், வல்லமை, நீதி, அன்பு இவைகளின் ஊற்றும் இவைகளை விருத்தி செய்கிறதுமான அவருடைய குணத்துக்கும் நோக்கங்களுக்கும் இப்படிப்பட்ட எண்ணங்கள் மாறுபட்டவைகளாக இருக்கின்றன. தீமையைச் செய்யத்தூண்டுகிற சோதனைகள், தேவனுடைய சுபாவத்தின் கவனத்தைக் கவராதது போல, இவைகள் தன்னுடைய சிருஷ்டிகளை வசீகரித்து சிக்க வைக்கிறவைகளாக அவருடைய சுபாவங்களிலிருந்து புறப்பட முடியாது. தீமை செய்யத்தூண்டுகிற சோதனைகள் தேவன் மேல் சுமத்துவது தேவதூஷணமாகும். நன்மை செய்யத்தூண்டுகிற சோதனைகள் அவருக்குரியது என்று கருதுவது அவரைப் புகழுவதாகும். நன்மை செய்யத்தூண்டுகிற சோதனைகளை அவர் மேல் சுமத்தும்போது, தீமை செய்யத்தூண்டுகிற நம்முடைய சோதனைகளை அவர் மேல் சுமத்துவதைத் தவிர்ப்போமாக. இதைப்பார்க்கிலும், இவைகள் யாருக்குத் தகுந்த பிரகாரமாக உரித்ததாயிருக்கின்றனவோ அவைகள் மேல் சுமத்துவோமாக.
:- பிசாசு, உலகம், மாம்சம். **- P ’26, 157.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 3:1-13; உபா 13:3; சங் 119:165; நீதி 1:10-17; 6:27; 14:27; ஏசா 33:15,16; மத் 4:1-11; 26:41; லூக் 11:4; 2கொரி 11:3,14,15; யாக் 1:14; 2பேது 2:9; 1கொரி 10:13.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 341 (R 5799).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் என்ன விசேஷ சோதனைகள் எனக்கிருந்தன? நான் அதை எவ்வாறு சந்தித்தேன்? அதன் பலன்கள் எவை?**